**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,அன்னூர்.**

**O.S.No. 436/ 2023**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், செவ்வாய்க்கிழமை 17–ம் நாள் திரு.குமரேசன் என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. வெ.மோனிகா, பி.ஏ.,பி.எல்.,எல்.எல்.எம்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதி, அன்னூர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமரேசன் | வயது | 43 |
| த.பெ. | முருகேசன் | தாலூக்கா | அன்னூர் |
| கிராமம் | கோட்டைபாளையம் | மாவட்டம் | கோவை |
| தேதி | 17.02.2026 | DW –2 | |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 4 ம் பிரதிவாதி. இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பொருத்து எழுத்துமூல நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனவே அதனை எனது முதல் விசாரணையாக பாவிக்குமாறு கேட்டுகொள்கிறேன். எங்கள் தரப்பு ஆவணங்களாக பின்வரும் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 08.07.2025 | புல எண். 302/1A பட்டா | இணைய தரவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| பி.சா.ஆ.2 | 08.07.2025 | புல எண். 302 – புல வரைபடம் | இணைய தரவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| பி.சா.ஆ.3 | 08.07.2025 | புல எண்.313/6 – பட்டா | இணைய தரவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| பி.சா.ஆ.4 | 08.07.2025 | புல எண்.313 – புல வரைபடம் | இணைய தரவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| பி.சா.ஆ.5 | 08.07.2025 | புல எண்.246/3 – பட்டா | இணைய தரவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| பி.சா.ஆ.6 | 08.07.2025 | புல எண். 246 – புல வரைபடம் | இணைய தரவிறக்கம் செய்யப்பட்ட நகல். |

மேற்கண்ட என் சாட்சியத்தினை ஏற்றுக் கொண்டு வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.